Registered No. M 5068

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ புரட்டாசிமீ 5உ 20—9—1948 ஹிஜ்ரி 1367 துல்கஃதாமீ 16உ திங்கட்கிழமை. } இதழ் 34

## சுதந்திர இந்தியாவில் சாத்வீகப் புரட்சி.

• • •

**விடுதலைக்குப்** பிறகு நாட்டின் சரித்திரத்தில் ஏற்பட்ட மஹத்தான மாறுதல்களிலெல்லாம் சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் இணைந்தது மிக முக்கிய சம்பவமாகும். பிரிட்டிஷாரின் ஜூன் 3-ந்தேதி அறிக்கைக்குப் பிறகு சமஸ்தானங்களிலிருந்து பிரிட்டிஷ் ஆதிபத்தியம் அகன்றுவிட்டது. சுதந்திர இந்தியாவின் பொது நலனையும், முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு இந்திய யூனியனில் இணைய சமஸ்தானங்கள் ஒருமுகமாக முடிவு செய்தன. ஒரு சில சமஸ்தானங்களைத் தவிர கிட்டத்தட்ட அறுநூறு சமஸ்தானங்கள் ஒரே திட்டத்தில் தொகுக்கப்பட்டு யூனியன்களாக அமைந்துவிட்டன. சமஸ்தான யூனியன்களில் சேரவோ அல்லது தனித்திருக்கவோ வசதியற்றிருந்த சிறிய சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் சேர்ந்துவிட்டன. சமஸ்தானாதிபதிகள் தங்கள் அதிகாரத்தை இஷ்டப் பூர்வமாக இந்திய யூனியனிடம் ஒப்படைக்க முன்வந்தனர். எல்லாவித எதேச்சாதிகாரங்களையும் விட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் என்ற அந்தஸ்துடன் 'ராஜபிரமுகர்கள்' 'உபராஜ பிரமுகர்கள்' என்று அழைக்கப்பட இசைந்தனர்.

சமஸ்தானாதிபதிகள் காலப்போக்கையும் பொது நலனையும் உணராமல் புத்திசாலித்தனமற்ற முறையில் நடக்க முற்பட்டிருந்தால் அவர்களுடைய அந்தஸ்துக்கே ஹானி ஏற்பட்டிருக்கும் அதனால் இந்தியா பல கூறுகளாகப் பிரிந்து இந்திய சமூக ஐக்கியமும் குலைந்து நாட்டின் பாதுகாப்புக்கும் அபாயம் ஏற்பட்டு பரிகரிக்க முடியாத அளவுக்கு சீர்கேடும் விளைந்திருக்கும். இந்திய உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேல் சமஸ்தான இலாகா பொறுப்பை ஏற்றவுடன் இந்திய யூனியனில் இணையும்படி சமஸ்தானாதிபதிகளைக் கேட்டுக்கொண்டார். அரசியல் நிர்ணய சபையில் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் சரிசம பங்காளிகள் என்ற முறையில் முன்பிருந்ததைவிட சமஸ்தானங்களுக்கு இந்திய யூனியனில் உயரிய ஸ்தானம் கிடைக்குமென்றும் உறுதியளித்தார்.

அன்று கவர்னர் ஜெனரலாக யிருந்த லார்ட் மவுண்ட் பேட்டனும் இந்திய யூனியனில் சேர்ந்துவிடும்படி சமஸ்தானாதிபதிகளுக்கு யோஜனை கூறினார்.

சமஸ்தானாதிபதிகள் கண்ணியமாக முன்வந்தனர் 1947 ஆகஸ்ட் 15க்கு முன்பே ஜூனாகட், காஷ்மீர், ஹைதராபாத் தவிர சமஸ்தானாதிபதிகள் அனைவரும் இந்திய யூனியனில் சேர சம்மதித்தார்கள்.

அரசியல் நிர்ணய சபை பொதுவாக இந்தியா பூராவுக்கும் குடியரசுப் பிரகடனம் செய்ததென்றாலும் சமஸ்தானாதிபதிகளை அறவே ஒழிக்க இந்திய சர்க்கார் நினைக்கவில்லை. சமஸ்தானங்களில் பொறுப்பு வாய்ந்த ஜனநாயக ஆட்சி அமைத்து சமஸ்தானாதிபதிகளை சட்ட பூர்வமான அதிகாரிகளாக்கி அவர்களுடைய பழைய உரிமைகளையும் அந்தஸ்தையும் பொது நன்மைக்கு ஏற்ற வகையில் திருத்தியமைப்பதையே இந்திய சர்க்கார் வற்புறுத்திவந்தது.

1939-ம் வருஷம் லூதியானாவில் கூடிய அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மஹாநாடு ஜனத்தொகையில் பத்து லட்சத்துக்கும், வருமானத்தில் ஐம்பது லட்சத்துக்கும் குறைவாயுள்ள சமஸ்தானங்கள் அந்தந்த மாகாணங்களுடன் இணைக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தது.

ஆனால் பத்து லட்சம் ஜனத்தொகை கொண்ட அதாவது அரசியல் நிர்ணய சபைக்கு தன்னுடைய

பிரதிநிதியை அனுப்பவல்ல சமஸ்தானங்களை தனித்திருக்க அனுமதிப்பதென்றும் சமஸ்தான மக்கள் சமஸ்தானாதிபதி ஆகிய இருவரின் இஷ்டத்துக்கு மாறாக அதன் உள்நாட்டு சுதந்திரத்தில் இந்திய சர்க்கார் தலையிடாமல் இருப்பதென்றும் ஒன்று சேர்ந்து சமஸ்தான யூனியன்கள் அமைப்பதற்கு சிறிய சமஸ்தானங்களை தூண்டுவதென்றும் இந்திய சர்க்கார் தீர்மானித்தது. பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இதை நடை முறையில் கொண்டுவர ஆரம்பமான வேலை இன்று பூர்த்தியாகும் கட்டத்திலிருக்கின்றது.

சமஸ்தான இணைப்பு விஷயத்தில் இந்திய சர்க்கார் அனுஷ்டித்த கொள்கை அப்பழுக்கற்றது. பரந்த மனோபாவத்தையும் நியாயத்தையும், ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்டதென்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற சமஸ்தானங்களை விட ஹைதராபாதுக்கு சிலாக்கியமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டனவென்றே சொல்லவேண்டும். இந்திய சர்க்காரின் நியாயமான கோரிக்கைக்கு நிஜாம் இணங்க மறுத்தது பைத்தியக்காரத்தனமாகும். நிஜாமின் பிடிவாதம் சுதந்திர இந்தியாவில் நடந்தேறிய மஹத்தான சாத்விக புரட்சிக்கு திருஷ்டி பரிகாரமாக அமைந்தது போலும். காலப்போக்கை உணராமல் இருபதாவது நூற்றாண்டின் ஜனநாயக சகாப்தத்தில் சுதந்திர ஜனநாயக இந்தியாவின் வயிற்றுக்குள்ளிருந்து கொண்டு யதேச்சாதிகார கனவு காண்பது முட்டாள்தனமாகும்.

அது மட்டுமின்றி யதேச்சாதிகார ஆசையில் நிஜாம் சர்க்கார் கையாண்ட முறைகளை எந்த ஒரு நியாயவாதியும் ஒரு வினாடிக்கேனும் சகித்துக் கொண்டிருக்க முடியாது பலாத்காரத்தின் மூலம் மக்களின் சுதந்திர உணர்ச்சியை அடக்கி விடலாமென்று நம்பிய ரஜாக்கர்களுக்கு நிஜாம் சர்க்கார் ஆதரவளித்தது ரஜாக்கர் ஸ்தாபனத்தை கலைக்கும்படி இந்திய சர்க்கார் பன்முறைவிடுத்த கோரிக்கைகள் மதிக்கப்படவில்லை. ரஜாக்கர்களின் காலித்தனம் நாளுக்குநாள் அதிகரித்தது. சமஸ்தான மக்கள் பீதியடைந்து சமஸ்தானத்தைவிட்டு வெளியேற ஆரம்பித்தனர். வெறிச்செயல்கள், படுகொலைகள், சர்வ சாதாரணமாகிவிட்டன. ஜாதி, மத, பேதமின்றி ஜனநாயக வாதிகள் கொல்லப்பட்டனர். ஈவிரக்கமின்றி அவர்களுடைய கைகள் துண்டிக்கப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். காலிகளின் அட்டஹாசத்தை அடக்க முடியாமல் அல்லது அடக்க இஷ்டப்படாமல் நிஜாம் சர்க்கார் விட்டு வைத்திருந்தது.

சுதந்திர இந்தியாவின் ஒரு பிரதேசத்தில் நிரபராதிகளுக்கு இழைக்கப்படும் தீங்கை இந்தியா சகித்துக்கொண்டிருக்க முடியாதென்பது வெளிப்படை. எனவே சமஸ்தானத்தில் அமைதியை நிலைநாட்டி காலிகளை ஒடுக்க வேண்டிய அவசியத்தை இந்திய சர்க்கார் உணர்ந்தது. சட்ட பூர்வமாக தனக்குள்ள உரிமைப்படி சிகந்தராபாத்தில் படைகளை அனுப்பி வைக்க இந்திய சர்க்கார் தீர்மானித்தது. நிஜாம் அதற்கு இணங்கவில்லை. இந்நிலையில் போலீஸ் நடவடிக்கையெடுத்து சமஸ்தானத்தின் அமைதியை நிலைநாட்டுவதைத்தவிர இந்திய சர்க்காருக்கு வேறு வழியில்லை. இந்தியப் படைகள் அஷ்ட திக்குகளிலிருந்தும் சிகந்தராபாதை நோக்கி முன்னேறின. ஜாதிமத பேதமின்றி கொடுமைக்குள்ளாக்கியிருந்த சமஸ்தான மக்கள் குதூகலமாய் வரவேற்கின்றனர். நிஜாமின் எதேச்சாதிகார ஆசையும் ரஸ்வியின் வாய் வீச்சும் அலைகளை தடுத்து நிறுத்திவிட முடியவில்லை.

ஹைதராபாத் இந்தியாவின் மிகப் பெரிய சமஸ்தானம். அதன் சமஸ்தானாதிபதி ஒரு முஸ்லிம் கண்ணியமான முறையில் இதர சமஸ்தானாதிபதிகளைப்போல் அவரும் நடந்து கொண்டிருந்தால் தனக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் சேவை செய்ததாகவே இருந்திருக்கும். விஷமிகளின் துர்போதனையைக் கேட்டு இந்தியாவில் சிநேகபான்மையான அழைப்பை மறுத்து நிஜாம் தன்னுடைய தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்ளப் பார்த்தார் ஏற்பட்ட வினைவுகளுக்கு நிஜாம் சர்க்காரும் ரஸ்வி கும்பல்களுமே ஜவாப்தாரி. நிஜாமின் எதேச்சாதிகாரக்கனவை சமஸ்தானத்தின் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேரும், இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம் அனைவரும் ஆதரிக்கவில்லையென்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. ஹைதராபாத் மக்களை கொடுமையிலிருந்து மீட்டு காலிகளின் கொட்டத்தை அடக்கிய பிறகு இந்திய சுதந்திரம் பரிபூரணமாய் பரிமளிக்கப்போகிறது


'ஆஸாத்'

பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:

அப்துல் சலாம், ஈரோடு.

# நாட்டின் கௌரவத்தைக் காக்க உயிர் நீத்த தீரர்கள்.

—( நாகை வி. இ எம். ஹமீது யூசுபு வத்தனீ )—

**ராஜ் முகம்மது:—** இவர் ஹைதராபாத் வாசி. கரீம் நகர் ஜில்லாவிலுள்ள ரங்கபுரி என்ற ஊரின் படேல். தீவிர காங்கிரஸ்காரர். இந்திய யூனியனில் ஹைதராபாத் சேரவேண்டுமென்று ரஜாக்கர்களின் அட்டகாசத்திற்கிடையில் பிரசாரம் செய்து வந்தார். அதனால் ஆத்திரமடைந்த ரஜாக்கர்கள் இவரைப் பிடித்துக்கொண்டு போய் ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டிவைத்து, இந்திய யூனியனிடம் இனி விசுவாச மாக இருக்க மாட்டேனென்று சொல்லும்படி வற் புறுத்தினர். இவர் இறுதி வரை மறுத்திடவே, அவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**ஷஹாபுல்லாகான்:—** இவர் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியர். ஹைதராபாதில் "இம்ரோஸ்" என்ற உருது தினசரி பத்திரிகையை நடத்தி வந்தார். இவர் ரஜாக்கர்களின் அக்ரமங்களைப் பற்றி பலமாகக் கண்டித்துத் தமது பத்திரிகையில் எழுதி வந்ததுடன், ஹைதராபாத் இந்திய யூனியனில் சேர வேண்டிய அவசியத்தைப்பற்றியும் வற்புறுத்தி எழுதி வந்தார். இதனால் ஆத்திரமடைந்த கொள்ளைக் கூட்டத்தின ராகிய ரஜாக்கர்கள், ஒரு இரவில் இவர் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த போது காசிபுடா என்ற இடத்திலுள்ள இவரது வீட் டிற்கருகில் இவரைச் சுட்டுக் கொன்றனர். பிறகு அவர்கள் தமது வாட்களாலும் இவரை வெட்டினர். விஷயம் தெரிந்து இவரின் உறவினர் இவரை ஆஸ்பத் திரிக்கு தூக்கிச் சென்றனர். ஆனால் போகும் வழி யிலேயே இவர் உயிர் துறந்தார். இவரின் பரிதாப மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக சுல்தான் பஜார் கடைகள் மூடப்பட்டன. மாணவர்கள் தமது பள்ளிகளுக்குச் செல்லவில்லை. இவரது பிரேத ஊர் வலத்தில் சமஸ்தான காங்கிரஸைச் சேர்ந்த ஹிந்து முஸ்லிம்கள், பொதுமக்கள் எல்லோரும் கலந்து கொண்டனர். இவரின் மரணத்தைக் குறித்து ஹைதராபாத் சமஸ்தான காங்கிரஸின் பொதுக்காரிய தரிசி பிராணேசாச்சார்யா விடுத்த அறிக்கையில் நிஜாம் சர்க்காரின் கொள்கைகளை ஆதரிக்காதவர் களுக்கு என்ன கதி நேரிடும் என்பதையே இவரின் மறைவு காட்டுகிறதென்றும், ஓர் உண்மையான தேசாபிமானியைத் தாங்கள் இழந்துவிட்டதாகவும் கூறினர். இந்தியாவின் ஏஜெண்டு ஜெனரலாக ஹைதராபாதிலிருக்கும் கே. எம். முன்ஷி தமது அனு தாபச் செய்தியில் "ஷஹாபுல்லாகான் ஒரு தியாகி என்று ஹைதராபாத் மரியாதை செலுத்தும் காலம் வரும்." என்று கூறினர். ஹைதராபாதில் இவ்விருவர் போன்றோர், இவ்விதம் உயிர் துறந்ததன் மூலம் நிச்சயம் ஹைதராபாத் இந்திய யூனியனிலேயே இருக்க வித்திட்டுச் சென்றுள்ளனர் என்பதே மேதை முடிவு.

**ஹவில்தார் ஷேக் முகம்மது இப்ராஹிம்:—** இவர் சென்னை மாகாணவாசி. காஷ்மீரில் ஊரிசகோதி முனையிலுள்ள உயரமான மலை உச்சிகளிலும் சிக்க லான பாதைகளிலும் இந்தியத் துருப்புக்கள் ரோந்து சுற்றிக் கொண்டிருக்கையில் எங்கோ ஒரு இடத்தி லிருந்து எதிரிகள் சுட்டனர். பார்த்தார் இவர். முன் னணி கோஷ்டியில் சென்றுகொண்டிருந்த இவர் தள பதியின் உத்திரவுக்குக்கூடக் காத்திராமல் தமது ஆட் களில் ஒருவரிடமிருந்து பிரென் துப்பாக்கியைப் பிடுங்கி எதிரிகளைத் தாக்குவதற்காகப் பாய்ந்தார். வலது புரத்தில் திரும்பி எதிரிகளின் கூடாரத்தில் பாய்ந்து அங்கிருந்த மூன்று பிடாரிகளைக் கொன்றார். மீண்டும் கனவேகமாக இடது புரம் திரும்பி எதிரி களின் மெஷின் கன்களை முடமாக்கி அங்கிருந்த இருவரைத் தீர்த்துக் கட்டினர். மின்னல் போல அங்குமிங்கும் பாய்ந்து தாக்குகையில் எங்கிருந்தோ வந்தது ஒரு துப்பாக்கிக் குண்டு. காயமடைந்து உடனே வீர சொர்க்கம் எய்தினர். இவரின்சாமர்த் தியத்தால்தான் இந்திய ரோந்து கோஷ்டி எதிரியின் ஸ்தானத்தை இலகுவில் கைப்பற்ற முடிந்தது.

பார்த்தீர்களா! சென்னை மாகாண முஸ்லிம்காள்! நாமும் அவரைப் போன்று இந்திய யூனியனிடம் உண்மை விஸ்வாசம் கொண்டு அதனைக் காப்பாற்ற உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக வேண்டாமா? ஆகவே இன்றே வகுப்புவாதத்தை விட்டுவிட்டு தாய் நாட்டைக் காப்பாற்ற முனைவோமாக!

## பேராசிரியர் அப்துல் பாரி.

நம் தாய்நாட்டின் அடிமைத்தனையைத் தகர்த் தெறிய முற்பட்ட பெரியார்களில் பேராசிரியர் அப்துல் பாரியும் ஒருவர். அவர் பீஹார் மாகாண வாசி. வயது 54. அவர் பாட்னா யுனிவர்ஸிடியில் சில காலம் பேராசிரியராக இருந்தார். அவர் அரபி மொழியில் தேர்ச்சி பெற்று, இஸ்லாமியக் கலையைப் பயின்று மௌல்வி பட்டத்தையும் பெற்றார். தேசியப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக பாட்னா யுனிவர்ஸிடியிலிருந்து பேராசிரியர் பதவியை உதறித்

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 20—9—'48 திங்கட்கிழமை | இதழ் 34

# ஹைதராபாத் சரணகதி.

**ஹைத**ராபாத் மீது சர்க்கார் எடுக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கை வெற்றியில் முடிந்தது. நிஜாம் சர்க்கார் சரணடைந்தனர். ரஜாக்கர்களின் கொடுமைகளிலிருந்து ஜாதி மத பேதமின்றி ஹைதராபாத் மக்களுக்கு விமோசனம் கிடைத்துவிட்டது. அத்துடன் ரஜாக்கர்களின் கொடுஞ்செயல்கள் இந்தியாவில் எந்த ரூபத்தில் எதிரொலிக்குமோவென்று பயந்துவந்த இந்திய முஸ்லிம்களின் கவலையும் தீர்ந்தது. நாலரை கோடி முஸ்லிம்களை பகடைகளாக வைத்து பாகிஸ்தான் சூதாடிய சுயநலக்காரர்கள் மீண்டும் இந்திய முஸல்மான்களை பலியிட்டு நிஜாமிஸ்தான் சூதாட திட்டமிட்டிருந்தனர். ஹைதராபாத்மீது நடவடிக்கை எடுத்தால் கிழக்கு, மேற்கு பஞ்சாப்களில் நடந்ததைப்போல் இந்தியா பூராவிலும் பயங்கர வகுப்புக்கலவரங்கள் மூளுமென்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியான ஸர் ஜபருல்லா மிரட்டினார். பாகிஸ்தான் பிரதம மந்திரி இந்தியப் பிரதம மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் இதே போன்ற பல்லவியை பாடியிருந்தார். சமயம் நேரும்போது நாலரை கோடி இந்திய முஸல்மான்களும் ஹைதராபாத்துக்கு ஐந்தாம்படை வேலை செய்வரென்றும் ஹைதராபாத் தாக்கப்பட்டால் ஐந்து வருஷங்கள் வரை இந்தியாவெங்கும் ஓயாத வகுப்புக் கலவரங்கள் நடக்குமென்றும் ரஜாக்கர் தலைவன் காஸிம்ரஜ்வி சதா பயமுறுத்தி வந்தான். எல்லாம் இன்று பச்சைப் பொய்யாகிவிட்டது. ஹைதாரபாத்திலும், பாகிஸ்தானிலுமுள்ள லீக் விஷமிகள் ரத்தக்களரியைப் பற்றிப் பேசி வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டு இந்திய முஸ்லிம்களை பலியிட்டு நிஜாமிஸ்தானை ஏற்படுத்திவிடப் பார்த்தனர். அது பலிக்கவில்லை. இந்தியாவில் வகுப்புக் கலகங்கள் நடந்தால் முஸ்லிம்களே அதிகமாய் பாதிக்கப்படுவரென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அதைப்பற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது. வகுப்புக் கலவரங்கள் தோன்றாமல் தடுக்கவும் தோன்றினால் அடக்கவும் இந்திய சர்க்கார் மேற்கொண்ட முன்னெச்சரிக்கையால் விஷமிகளின் நீசத்தனமான எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது. இந்திய முஸல்மான்களின் அமைதியான வாழ்க்கைக்கு எவ்வித பங்கமும் ஏற்படவில்லை. மீண்டுமொரு முறை தங்களை பலியிட திட்டமிட்டிருந்த லீக் விஷமிகளின் விஷமத்தனம் வெற்றிபெறாமல் தகர்த்த இந்திய சர்க்காருக்கு இந்திய முஸ்லிம்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். இத்துறையில் இந்திய சர்க்காரின் சாதனை மஹத்தானது. போலீஸ் நடவடிக்கை வெற்றியை விட அதை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாது. அதன் மூலம் சிறுபான்மையினர் பாதுகாப்பில் இந்தியா கொண்டிருக்கும் அக்கரை உலகுக்குத் தெரிந்து விட்டது இந்திய முஸல்மான்களுக்கு தீங்கிழைக்கப்படுவதாக சர்வதேச மேடைகளில் முதலைக்கண்ணீர்வடித்து வந்த சுயநலக்காரர்களின் மாய்மாலம் இன்று அம்பலமாகிவிட்டது. ஒருகாலத்தில் லீகர்கள் எப்படி நடந்து கொண்டிருந்தபோதிலும் இன்று இந்திய சர்க்காரை இந்திய முஸல்மான்கள் ஒரு முகமாக ஆதரிக்கின்றனரென்பது தெளிவாகிவிட்டது. வெட்கமிருந்தால் இனி பாகிஸ்தானிகள் இந்திய முஸல்மான்களைப் பற்றிப் பேசாமல் இருக்கவேண்டும். எத்தனையோ கோடி ரூபாய் கொடுத்துதவிய நிஜாமுக்கு எவ்விதத்திலும் உதவ முடியாத பாகிஸ்தான் இந்தியாவின் மூலை முடுக்குகளில் பரவி வாழும் முஸ்லிம்களுக்காக ஒன்றும் செய்ய முடியாதென்பதை இந்திய முஸ்லிம்களும் தெரிந்துகொள்ள வேண்டும். ஜுனாகட் நவாப் அடைந்த கதிக்கு பாகிஸ்தான் அனுதாபமே காரணம். இன்று ஜுனாகட் நவாப் கராச்சியில் நாய்களுடன் அளவளாவுகின்றார். இன்னும் அதிகமான சேதத்துக்கு இடங்கொடாமல் நிஜாம் சர்க்கார் சரணடைந்தது புத்திசாலித்தனமான செய்கைதான ஆயினும் இந்தியாவின் கௌரவமான அழைப்பை ஆரம்பத்திலேயே அவர் ஏற்றிருநதால் எவ்வளவோ கௌரவமாக இருந்திருக்கும் நிஜாம் சர்க்கார் அதைச் செய்யத் தவறிவிட்டது. இன்று கலைக்கப்பட்ட ரஸாக்கர் படையை அன்றே கலைத்திருக்கலாம். கிழக்கு வங்கம், காஷ்மீர், ஹைதராபாத் மூன்று திசைகளிலிருந்தும் புலிகள் பாய்ந்து வந்து டில்லி செங்கோட்டையில் சந்திக்கப் போவதாக உளறிக்கொட்டிய காஸிம் ரஸ்வி இன்று இருக்குமிடம் தெரியவில்லை. இந்திய சர்க்காரின் சமாதானக் கொள்கைக்கு காலிகளை விட்டு வைப்பது அல்லது காலித்தனத்தை வளரவிடுவது என்று அர்த்தமல்ல.

[ 3-ம் பக்கத் தொடர்ச்சி ]

தள்ளினார். விடுதலைப் போராட்டங்களின் போது அவர் பட்ட கஷ்டங்கள் பல. பல முறை சிறை வாசத்தையும் மேற்கொண்டிருக்கிறார் தான் சாவதற்குள் நம் நாடு சுதந்திரமடைந்து அதைக் காணும் பேற்றைத் தானும் பெற வேண்டுமென விரும்பினார். அவர் தொழிலாளர்களின் நலனுக்காக தமது வாழ்நாள் பூராவும் உழைத்திருக்கிறார். அதனால் "தொழிலாளர் தகப்பன்" என்ற பெயரையும் பெற்றார். ஜம்ஷெட்பூரில் நடந்த தொழிலாளர் ஸ்ட்ரைக்குகளிலெல்லாம் அவரே தொழிலாளர் சார்பாக முன்னின்று வெற்றிகரமாகச் சமரசமேற்படுத்தினார். தொழிலாளி எவனும் கஷ்டப்படாமல் தன் வாழ்க்கையைச் செவ்வனே நடத்த முதலில் நாடு சுதந்தரமடைய வேண்டுமென்று அவர் விடாது சொல்லிவந்தார். இந்திய யூனியனிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியின் உள்ளத்திலும் அப்துல் பாரி இன்னும் வாசம் செய்துகொண்டிருக்கிறார் அவர் வகுப்புவாதத்தைப் பலமாகக் கண்டித்துவந்தார். அவர் பீஹார்மாகாண காங்கிரஸ்கமிட்டியின் தலைவராக தன் மரணபரியந்தம் இருந்து வந்தார். 1932-ல் பீஹாரில் அவர் தலைமையில்தான் முதன் முதலில் காங்கிரஸ் சோஷியலிஸ்டு கட்சி ஏற்படுத்தப்பட்டது. அவரின் தியாகத்தையும் தொண்டையும் காந்திஜீயே பல முறை புகழ்ந்திருக்கிறார். ஒரு சமயம் அப்துல் பாரியின் வீட்டிற்கு காந்திஜி சென்றிருந்த போது அவரின் வீடு பாட்னா நகரின் ஒரு மூலையில் அதாவது தொழிலாளர்களின் வீடுகள் உள்ள பக்கம் ஒரு குடிசையாயிருந்ததையும், ஆடம்பரமின்றி அவர் ஏழ்மை வாழ்க்கை நடத்தினதையும், அவரின் மேஜையின் மேல் புஸ்தகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்ததையும் கண்ணுற்றார்; ஒரு பிரபல காங்கிரஸ் தலைவர், செல்வாக்குள்ளவர் இவ்விதம் ஏழ்மைத்தனமாக வாழ்க்கை நடத்தினதைப் பார்த்து தாம் ஆச்சரியமுற்றதாகவும் கூறினார் அப்துல் பாரி 1947-ம் வருஷ ஆரம்பத்தில் ஒருசமயம் பாட்னாவிலிருந்து தொழிலாளர்கள் விஷயமாக ஜம்ஷெட்பூருக்குச் சென்று அங்கு வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பி வருகையில் சௌக்கியில் நின்றுகொண்டிருந்த இரு கூர்க்க சிப்பாய்கள் தம் துப்பாக்கிகளைக் காட்டி அவருடையகாரை நிறுத்தினர் அவர் கோபமாகக்காரை நிறுத்தி, என்ன விஷயம் என்று பேசிக்கொண்டிருக்கையில் சிப்பாய்களுக்கும் அவருக்கும் வாக்குவாதம் தடித்தது அப்பொழுது ஒரு சிப்பாயின் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கினார். பிடுங்கின வேகத்தில் துப்பாக்கி முனை உடைந்துவிட்டது. அப்பொழுத அவ்வழியே வந்த கொண்டிருந்த அப்துல் பாரியின் நண்பர் அவரிடம் சென்று விஷயத்தை விசாரித்துக் கொண்டிருக்கையில் பக்கத்திலிருந்த இன்னொரு கூர்க்க சிப்பாய் துப்பாக்கி முனை உடைந்ததைக்கண்டு ஆத்திரப்பட்டுத் தனது துப்பாக்கியால் அவரைச்சுட்டுவிட்டான் அங்கேயே இறந்து விழுந்தார் அப்துல்பாரி. அவரின் பிரேதத்தைக் காரில் பாட்னாவுக்குக் கொண்டுபோய் கல்லடக்கம் செய்தனர் அவரின் பரிதாப மரணத்திற்கு இந்திய நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது அவர் இறந்த விஷயத்தைக் கேட்டுத் துக்கிக்காதவர் இந்நாட்டில் எவருமில்லை. அவர் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் அவர் செய்துள்ள தியாகச் செயல்கள் ஏழ்மை வாழ்க்கை முதலானவைகள் இன்றும் அவரை நினைக்கும்படி நம்மைத் தூண்டுகின்றன ஆகவே என்றென்றும் வாழ்க அவரின் நாமம்! வாழ்க அவரின் சீரியத்தொண்டு! ஜெய்ஹிந்த்!

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

சமாதானமான முறையில் எவ்வளவோ முயன்று பார்த்தபிறகே போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டது. இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கையை திறமையுடன் சாதித்த இந்திய ராணுவத்தின் சேவையை பாராட்டுகிறோம். இந்தியாவின் பெயருக்கு எவ்வித களங்கமும் ஏற்படாமல் அமைதியுடன் நடந்து கொண்ட பொதுமக்களைபோற்றுகிறோம். இந்திய ஜனநாயகத்திலிருந்து வந்த குறையை நீக்கி பிரகாசிக்கச் செய்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

---

## I. N. A. சேவாதள கமிட்டி
## தொண்டர் படை
## அதிராம்பட்டினம்.

மேற்படி கமிட்டியில் M. E கமாலைப் போன்ற பல I. N. A. ஹிந்து முஸ்லிம் வீரர்கள் சேர்ந்து தேச நிர்மாண வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். மீதமுள்ள அந்த பிர்கா I. N. A வீரர்களும், மற்ற சகோதரர்களும் சேர்ந்து கிராமம், கிராமமாக தேச சேவையில் ஈடுபட்டு நம் தேசத்தை பலம் பெறச் செய்வார்களாக. மேலும் அவர்கள் நம் தேசீய அரசாங்கத்துக்கு விரோதமாக வேலை செய்யும் பிற்போக்கு கும்பல்களின் முயற்சிகளை முறியடிக்க தங்களை அர்ப்பணித்துக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

முகம்மது இப்ராஹிம், தலைவர்.

# சைனா பாகிஸ்தான் ராக்ஷஸ மதில்கள்.

சைனாவின் ராக்ஷஸ மதில் உலக அதிசயங்களில் ஒன்று. உலகம் பூராவிலும் மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட மிகப்பெரிய கட்டிடம் இதுதான். தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியின்றி சந்திர கோளத்திலிருந்து கண்ணுக்குப் புலப்படக்கூடிய மனிதன் நிர்மாணித்த கட்டடம் ஒன்று இருக்கமுடியுமானால் சைனாவின் ராக்ஷஸ மதிலாகத்தான் இருக்குமென்பது அநேகரின் அபிப்பிராயம்

பூமத்திய ரேகையில் மூன்றடி அகலமும், எட்டடி உயரமும் உள்ள சுவராக இந்த மதிற் சுவற்றை எழுப்பினால் உலகத்தையே சுற்றிவளைக்க முடியும்.

இந்த சுவற்றிற்கு இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் நாடுகளின் கட்டடங்களுக்கு பிடித்த அளவு செங்கல், கருங்கல் பிடித்திருக்குமென்று ஒரு விஞ்ஞானி மதிப்பிட்டிருக்கிறார்.

இதைக்கட்டுவதற்குத் தேவையாயிருந்த உழைப்பினால் நம் நாட்டிலுள்ள ரயில் பாதைகள், கால்வாய்கள், ரஸ்தாக்கள் அநேகமான பெரும் நகரங்கள் அமைத்திருக்க முடியுமென்று மிகப்பெரிய இஞ்ஜினியர் ஒருவர் கூறுகிறார்.

சின்ஷி ஹுவாங் என்ற சீன அரசனுக்கு இந்த மதிலை எழுப்பும் எண்ணம் உதித்தது. அவன் ஒரு நாட்டியக்காரியின் வயிற்றில் பிறந்தவன். இன்றிலிருந்து ஏறக்குறைய 2,200 வருஷங்களுக்கு முன் தன்னுடைய பதிமூன்றாவது வயதில் பட்டத்தில் அமர்ந்தான். இயற்கையாகவே சுகவாசியாக இருந்த அவன் அதிகார மோகத்தால் பீடிக்கப்பட்டான். ஐந்து லட்சம் தொழிலாளர்களின் ரத்தத்தை வியர்வையாக்கி ராஜமாளிகை கட்டுவித்தான். தலைநகருக்கு தூரத்திலிருந்து தன் அதிகாரத்துக்கு வெடிவைத்து விடாமல் பார்த்துக் கொள்வதற்காக பக்கத்திலேயே மந்திரி, பிரதானிகள் வசிக்க ஒரு நகரத்தையும் ஏற்படுத்தினான். ராஜமாளிகையை ஒட்டி ராணிகளின் உப்பரிகைகள் இருந்தன. சைனாவின் அழகிய யுவதிகளெல்லாம் அவனுடைய ராணிகள். முப்பத்தாறு வருஷங்களுக்கொருமுறை ஒரு ராணியிடம் ஓரிரவைக் கழிக்க சிற்றின்பப் பிரியனான அவனுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமாம்.

இவ்வித புண்ணியவானுக்கு எதிரிகளில்லாமலிருக்கமுடியுமா? மரண பயம் இல்லாமல்தான் போகுமா? உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளின் பயம் சின்ஷி ஹுவாங்கை வாட்ட ஆரம்பித்தது. சூழ்ச்சிக்கார மந்திரிகள் அநியாயக்காரசிப்பாய்களின் உதவியால் முதலில் உள்நாட்டு எதிரிகளை துவம்சம் செய்தான்.

பிறகு வெளி எதிரிகளின் அபாயத்தை தவிர்க்கும் வழிகளைக்குறித்து சிந்திக்கலானான். படையெடுப்பாளர்கள் காட்டுக் குதிரைகளில் ஏறி சைனாவின் வடபகுதியை அடிக்கடி அழித்து வந்தனர். அவர்களுடைய படையெடுப்பைத் தடுப்பதற்காக அரசன் மதில்கட்ட உத்திரவிட்டான். முடவர்கள், நொண்டிகளைத்தவிர மற்ற அனைவரும் நிர்ப்பந்தமாய் மதில் கட்டுவதில் ஈடுபட்டனர். பண்டிதர்களுக்கும் விதிவிலக்கிருக்கவில்லை. கொலையாளிகள், திருடர்கள், கொள்ளைக்காரர்கள் கூட கட்டாயமாக சேர்க்கப்பட்டனர். சவுக்கடி கொடுத்து ஆட்டு மந்தைகளைப் போல் தொழிலாளர்களை மேஸ்திரிகள் ஓட்டிச்சென்றனர்.

கொஞ்சமும் எதிர்த்தவர்கள் அஸ்திவாரத்தில் போட்டு புதைக்கப்பட்டனர். இம்மியும் சோர்வடையும் தொழிலாளிகளின் முதுகு மேஸ்திரிகளின் சவுக்கடியால் உரிந்தது. பலர் இறந்தனர். அவர்களுடைய சடலங்கள் மதிலில் வைத்து கட்டப்பட்டன தொழிலாளர்களுக்கு உணவு கொண்டு செல்லுபவர்கள் தங்களையும் வேலையில் ஈடு படுத்தி விடுவர்என்ற பயத்தால் வழியிலேயே போட்டு விட்டு ஓடி விடுவார்கள்.

தங்கள் பதிகளுக்கு ஆகாரத்தைக் கொண்டு சென்று வழியிலேயே இறந்துவிட்ட பெண்மணிகளை இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்கும் சீனச்சிறுமிகள் வர்ணித்துப் பாடுவதுண்டு பல லட்சம் மக்களின் உழைப்பால் 2,500 மைல் நீளமுள்ள சைனாவின் ராட்க்ஷச மதில் பதினெட்டு வருஷங்களில் கட்டிமுடிந்தது கோபுரங்களில் காவலுக்காக வில்லாளிகள் அமர்த்தப்பட்டனர்.

மதில்கட்டி முடிப்பதற்குள் அனாதையான குழந்தைகள் எத்தனை? விதவைகளான பெண்மணிகள் எத்தனை? சேயை இழந்த தாய்மார்கள் எத்தனை? என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஒரு அரசனின் முட்டாள்தனமான ஆசைதீர ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்தன. ஆயுதந்தாங்கிய சிப்பாய்களைக் கொண்டு படையெடுப்பாளரை அவன் சமாளித்திருக்கவும் முடியும். அந்நிலையில் உலக அதிசயங்சளில் ஒன்று அதிகரித்திருக்க முடியாதல்லவா? யனித அறிவுக்கு இரக்கப்படுவதுடன் புகழவும் வேண்டியிருக்கிறது. தன்னுடைய உதிரத்தைக் கொண்டே ஞாபகார்த்தங்களை நிர்மாணிக்கும் மனிதன் மீது இரக்கப்படாமல் இருக்க முடியவில்லை. வருங்கால சந்ததிகளுக்கு சைனாவின் ராக்ஷஸ மதிலைப் போன்ற பயங்கரமான ஞாபகச் சின்

னங்களை விட்டுச்செல்லும் மனித அறிவை புகழாமலும் இருக்க முடியாது.

2,200 வருஷங்களுக்குப் பிறகு ஆசியாவின் இன்னொரு நாடான இந்தியாவில் மிகப் பெரியதொரு மதில் எழுப்பும் வேலை ஆரம்பமாயிற்று.

முன்னேற்றமடைந்துள்ள இக்காலத்தில் அதை கட்டி முடிப்பதற்கு அதிக காலம் பிடிக்கவில்லை. பல லட்சம் மக்களின் ரத்தமும் எலும்புக்கூடுகளும் அதற்குப் பிடித்திருப்பினும் கண்ணுக்குப் புலப்படாத வகையில் அமைந்ததுதான் இதிலுள்ள விசித்திரமான அம்சம். சுண்ணாம்புக்கு பதிலாக வேற்றுமை, பழிக்குப்பழி, வெறுப்பினால் கட்டப்பட்ட இந்த மதில் இரண்டு சமூகங்களிடையே அமைந்தது.

நாடு இரண்டாகப் பிரிந்தபிறகு இரண்டு கூறுகளுக்குமிடையே செங்கல்லையும் சுண்ணாம்பையும் கொண்டு மதில் எழுப்பவேண்டிய அவசியமிருக்கவில்லை. திருஷ்டியில்படாத இந்த மதிலுக்கு பாகிஸ்தான் மதில் என்று பெயரிடுவது முற்றிலும் பொருந்தும். இது ஒரு பைத்தியக்கார அரசனுடைய மூளைக் கோளாறின் விளைவல்ல. அறிவாளிகள், அரசியல்வாதிகள், உயரிய கற்பனையுள்ள கவிகளுடைய சிந்தனா சக்தியின் பலனேயாகும்.

பன்னிரெண்டு நூற்றாண்டுகளாக தங்களுடன் சேர்ந்துவாழும் சமூகத்தினர் பெரும்பான்மையினராக இருக்கின்றனரென்ற எண்ணம் திடீரென்று சிறுபான்மை சமூகத்தினருக்கு ஏற்பட்டது. அடிமைப்படுத்திக்கொள்வர்; விழுங்கிவிடுவர் என்ற கூச்சல் கிளம்பிற்று. சுயநலக்கார தலைவர்கள் இப்படிச் செய்தனரென்பது சிலருடைய அபிப்பிராயம். இவ்வித எண்ணத்தை ஆங்கிலேயர்கள் உண்டாக்கினரென்பது மற்றவர்களின் முடிவு. எப்படியிருப்பினும் சிறுபான்மையினர் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். "நம்முடைய நாகரீகம் வேறு; கலாசாரம் வேறு; மதம் வேறு; நாம் முற்றிலும் வேறுபட்டதொரு சமுதாயம்; நாம் தனித்து வாழ்ந்தோம்; இனியும் தனித்தே இருப்போம்; நம்முடைய பெரும்பான்மைப் பிரதேசங்கள் நம்மிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்; நாம் யாருடனும் சேர்ந்து வாழவிரும்பவில்லை" என்று வாதிக்க முற்பட்டனர். பெரும்பான்மையினர் சாத்தியமான எல்லாத்துறைகளிலும் சமாதானம் செய்தனர். மதம் மனிதனின் தனிப்பட்ட விஷயம்; அரசியலில் நாம் அனைவரும் ஒன்று; ஒரு கடவுளால் படைக்கப்பட்டோம்; ஒரு தேசத்தில் வாழுகின்றோம்; நம்முடைய மூதாதையரும் சேர்ந்து வாழ்ந்தனர்; நாமும் சேர்ந்தே வாழ்வோம்; அரசியல் விஷயங்களில் எந்த மதத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட மாட்டாது; நம்முடன் சேர்ந்திருங்கள்; உங்களுடைய உரிமைகள் உங்களுக்குக் கிடைக்கும்; உங்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படமுடியாது" என்று பெரும்பான்மையினர் அளித்த உறுதி மொழிகள் வீணாயின. பெரும்பான்மையினரைச் சேர்ந்த மாபெரும் தலைவர்களை வலையில் சிக்க வைக்க முயற்சிக்கும் மோசக்காரர்கள், வேஷதாரிகளென்றும் சொல்லப்பட்டது. சிறுபான்மையினர் தங்களுடைய உத்தேச தனி நாட்டை பலவருஷங்களுக்கு முன்பே பாகிஸ்தான் என்று பெயரிட்டு அழைக்க ஆரம்பித்தனர். ஆகையால்தான் அதற்கு நாமும் பாகிஸ்தான் மதில் என்று பெயரிட்டோம்.

முடிவில் சிறுபான்மையினர் பலாத்காரத்தில் இறங்கப்போவதாகவும் ரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடப்போவதாகவும் மிரட்டினார்கள். தங்கள் நலனைக் கருதி முடிவில் நேர்வழிக்கு வந்துவிடுவரென்று நம்பியிருந்த பெரும்பான்மையினர் இரண்டொரு மாகாணங்களில் சிறுபான்மை சமூகத்தினர் வாள் வீச்சிலிறங்கியதைப் பார்த்து விழிப்படைந்து விட்டனர். மேலும் ரத்தக்களரி ஏற்படுவதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் மதில் எழுப்புவதற்கு அவர்களும் இணங்கவேண்டியதாயிற்று. ஜனப்பரிவர்த்தனையுடன் பழிவாங்கும் மனப்பான்மையும் தலைதூக்கி பாகிஸ்தான் மதில் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போயிற்று. பாகிஸ்தான்மதிலுக்கு லட்சக்கணக்கான மக்கள் பலியாயினர். லட்சக்கணக்கான பெண்கள் விதவைகளாகி, குழந்தைகள் அனாதைகளாகி, குடும்பங்கள் அழிந்தன. எல்லாவற்றையும்விட பல ஆயிரம் சகோதரிகள் கற்பழிக்கப்பட்டனர்.

அன்று உயிர்களை மட்டும் பலிவாங்கி சைனாவில் மதில் எழும்பிற்று. முன்னேற்றமடைந்துள்ள இன்றைய நாகரீக சகாப்தத்தில் பாகிஸ்தான் மதிலின் உயர்ச்சிக்கும் உறுதிக்கும் காரமான சாந்து அவசியமாக இருந்தது போலும்! வருங்கால சந்ததிகள் பாகிஸ்தான் மதிலைக்கேள்விப்பட்டு பார்க்க வருவார்கள். அப்பொழுது அவர்கள் கண்டு அதிசயிக்க பாகிஸ்தான் மதிலின் சிதைந்த சின்னங்களும் இருக்காதென்பது நிச்சயம்.

இனி வளரப்போகும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையின் உன்னத கட்டடத்துக்கு முன்னால் பாகிஸ்தான் மதில் ஒரு சிறிய துரும்பாகவும் இருக்கப் போவதில்லை. இன்று சைனாவின் மதிலுக்கு அவசியமில்லாமல் வெறும் ஞாபகார்த்தமாக இருப்பதைப் போலவே ஒரு நாள் பாகிஸ்தான் மதிலும் தகர்ந்து போகும். ஆயினும் இந்தியா பாகிஸ்தான் யுவதிகள் கைகோர்த்து பல ஆயிரம் வருஷங்களுக்குப்பிறகும் பாகிஸ்தான் மதில் பற்றி பாடுவதைக் கேட்டு இந்தியர்கள் வெட்கித் தலைகுனியாமலிருக்க முடியுமா?

# செய்தி உலகம்.

## புதையுண்ட செல்வம்.

லாகூர், செப். 11

கிழக்கு பாஞ்சாலத்தில் புதைத்து வைத்துவிட்டு போன தங்களுடைய தங்கம், வெள்ளி ரெத்தினங்கள் நகைகள் வகையருக்களை திருப்பி எடுத்துக்கொண்டு போக வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்ட அகதிகளுக்கு கிழக்கு பாஞ்சால அகதி மந்திரி பின்வரும் பதிலை அனுப்பியிருக்கிறார்.

“அகதிகள் தங்களுடைய விண்ணப்பங்களை மேற்கு பாஞ்சால அகதி மந்திரிமூலம் அனுப்பிவைக்க வேண்டும் அதில்தன்னுடைய பூராவிலாசமும் இருக்க வேண்டும். புதைத்து வைக்கப்பட்டிருக்கும்இடத்தை குறிப்பிடக்கூடாது மந்திரிமூலம் வரும் விண்ணப் பங்களை ஏற்று அகதிகள் வந்து புதைத்துவைக்கப்பட் டிருக்கும் சொத்துக்களை தோண்டி எடுத்துக்கொண்டு போக பந்தோபஸ்து அளிக்கிறோம் விண்ணப்பங்கள் இந்த மாத முடிவுக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.”

○ ○ ○

## மிஸ்டர் அப்துல்கையூம் பூச்சாண்டி.

பிஷாவர், செப். 11

இந்திய அரசாங்கம் ஹைதராபாத் விஷயத்தில் தலையிடும்பட்சத்தில் தன்னுடைய அழிவை தானே தேடிக்கொள்ளும் என்று சென்ற இரவு இங்குபேசிய எல்லை பிரதமர் மிஸ்டர் அப்துல்கையூம் இந்திய அரசாங் கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார். இதைப்போலவே ஹைதராபாத்தில் இந்திய படைகள் பிரவேசிக்கு மானால் இந்தியா முழுவதும் வகுப்புக் கலவரங்கள் மூண்டுவிடும். என்று ஸர் ஜபருல்லாவும், லியாகத் அலியும் இதர இடங்களில் பேசியிருக்கின்றார்கள்.

○ ○ ○

## இந்திய யூனியனில் வகுப்பு வாதத்திற்கு இடமில்லை. பண்டித பந்தின் கர்ஜனை

லக்னோ, செப். 12

ஹைதராபாத் பிரச்னை வகுப்புவாதமற்றது. அது ஒரு அரசியல் நடவடிக்கையாகும். யூனியன் இந்தியா வில் இனி வகுப்புவாதத்திற்கோ, சுயநல வகுப்புவாதி களுக்கோ இடமே கிடையாது. ஏனெனில் இந்திய அரசாங்கம் ஒரு வகுப்புவாதமற்ற ஜனநாயக சர்க்கா ராகும் என்று ஐக்கிய மாகாண பிரதம மந்திரி ஸ்ரீ பண்டித பந்த் பேசினார். மேலும் பேசுகையில் முஸ் லிம் அதிகாரிகள் பிரிகேடியர் உஸ்மான் அடிச் சுவட்டை பின்பற்றி ஹைதராபாத்தில் கைகலப் பேற்பட்டால் தன்னுடைய தேசபக்தியை நிரூபிக்கத் தன்னுடைய உயிரையே பணயம் வைப்பார்கள். என் பது என் உறுதியான நம்பிக்கை தாய்நாட்டிற்கு அபாயம் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் எவரையும் வகுப்புவாத படுகுழியில்விழ நாம் சம்மதியோம். தன் தேசத்தை காப்பாற்றி பலம் பொருந்திய இந்தியாவை நிர்மாணித்து அதன்பழைய கௌரவத்தை காப்பாற்ற ஒவ்வொரு இந்தியனும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

○ ○ ○

## பாகிஸ்தான் லீடர்கள் இருளில் தத்தளிக்கிறார்கள்.

## இந்திய முஸ்லிம்கள் தன் தேசத்தைக் காக்க உயிர்களையும் அர்ப்பணிப்பர்.

பம்பாய்—செப். 12

இந்திய புண்ணியபூமியில் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத் தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கறையே ஹைதராபாத் ஆகும் அதை முஸ்லிம்கள் இஸ்லாமிய சாயத்தினால் துடைத்தெரிவார்கள் என்று ஜமீயத் உலமாவின் ஜெனரல் செக்ரடரி ஹகீம் ஆஸிமி அவர்கள் ஒரு கூட் டத்தில் பேசினார். மேலும் அவர் பேசுகையில் ஏமாற் றுவதற்கு முயலும் லீக் தலைவர்களின் வலையில் பாமர முஸ்லிம்கள் இனி தவறிவிழமாட்டார்கள் என்று நம்பு கிறேன். பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி ஸர் ஜப ருல்லா இந்தியா மறுபடியும் ரத்த வெள்ளத்தில் மூழ்கிவிடும் என்று பேசியிருப்பதை கண்டித்து இது லீக் தலைவர்களுடைய பழைய துவேஷ பிரசாரமாகும் என்றும் இரு சமுதாய கோடரிக்குப் பலியான நால ரைக்கோடி முஸ்லிம்களை மேலும் நாசத்திற்கு உள் ளாக்க முயற்சிக்கிறார்கள் என்றும் பேசினார் இவர்கள் நெஞ்சத்தில் ஈரமிருக்குமானால் நம்முடையவிஷயத்தில் தலையிடவேண்டாம். அவர்களுடைய சுய நலனுக்கு நம்மை பலியிட வேண்டாம். ஜபருல்லாவுக்கு நான் சொல்லுவதென்ன வென்றால் இந்திய முஸ்லிம்கள் இனி இந்த கோடரிகளுடைய பேச்சை கவனிக்கப் போவதில்லை. அவர்கள் தான் தாய்நாட்டை காப்பாற் றுவதற்காக தன்னுடைய கடைசி சொட்டு ரத்தத்தை யும் சிந்த தயாராய்விட்டார்கள். அவர்கள் ஜபருல்லா வைப்போல ஆங்கில அரசாங்கத்தின் மடியில் வளர்ந்த குழந்தையல்ல. ஆங்கிலேயரின் பாலைக் குடித்து வளர்ந்த ஒருவனுடைய பேச்சை இனி அவர்கள் சட்டைசெய்யப்போவதில்லை.

## ஹைதராபாத்தில் மூவர்ணக் கொடி.

## ஜமாலுத்தீன் மஹ்மூத் நிஜாமுக்கு கொடுத்த தந்தி

பம்பாய், செப் 11

மிஸ்டர் ஜமாலுத்தீன் மஹ்மூத் பம்பாயில் ஒரு பெரிய பிரமுகர். அவர் ஹைதராபாத் நிஜாமுக்கும், அவருடைய டில்லி ஏஜெண்ட் ஜெனரலுக்கும் அனுப்பிய தந்தியாவது:-

அந்திய அரசாங்கத்துக்கு அடிமையாக இருந்த ஒரு சமஸ்தானமானது ஜனநாயக சர்க்காரின் மேலாதிக்கத்தை நிராகரிக்க உரிமை கிடையாது. மூவர்ணக் கொடி எப்பொழுது இந்தியாவிலிருந்து யூனியன் ஜாக்கை அகற்றியதோ இயற்கையாக அதற்கு ஹைதராபாத், சிகந்தராபாத்தில் பறக்கும் உரிமை உண்டாயிற்று. இந்த இயற்கைக்கு விரோதமாக நடந்து கொள்ளும் எச்சமஸ்தானமும் இந்திய மண்ணின் பேரில் உயிர் வாழ முடியாது என்பது திண்ணம் இந்த இயற்கையின் தீர்ப்புக்கு நிஜாம் கட்டுப்பட்டு நடந்தால் அது தன்னுடைய கௌரவம் பொருந்திய ஸ்தானத்தை அடையலாம். ஆனால் அது தனக்கு பாதகம் விளைவிக்கும் ஸ்தாபனத்துடன் துடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது. இயற்கை தன்னுடைய நியாயத்தைப் பூர்த்திசெய்யத்தான் போகிறது.

O O O

## டில்லி முஸ்லிம்களின் நல்லெண்ணம்.

டெல்லி, செப். 11

வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பிறகு டெல்லி முஸ்லிம்கள் கூடி கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

இந்த முஸ்லிம்களுடைய மாபெரும் கூட்டம் துவேஷம் நிறைந்த ஜபருல்லாவின் பேச்சை வன்மையாக கண்டிக்கிறது. பாகிஸ்தானிலும், ஹைதராபாத்திலுமுள்ள துவேஷபிரசாரகர்களையும் கண்டிக்கின்றது. யூனியன் இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் நாலரைக்கோடி முஸ்லிம்களின் தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறது. யூனியன் இந்தியாவின் விரோதி நமது விரோதி இந்தியாவின் நண்பன் நமது நண்பன். இங்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் முஸ்லிம்களை விஜாரித்து குற்ற மற்றவர்களை விடுதலை செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இந்த மாபெரும் கூட்டத்தில் சோஷியலிஸ்டு கட்சி தலைவர் மீர்முஸ்தாக் அகமது பேசியதாவது :—

ஹைதராபாத் நிலைமையை குறித்து உங்களிடையே பேச விரும்புகின்றேன். காசிம் ரஸ்வி ஜபருல்லாவைப் போன்றவர்கள் தங்களுடைய சுயநலனுக்காக நாலரைக் கோடி முஸ்லிம்களை பலிக்கடாவாக்க முயற்சிக்கின்றனர். இவர்களுடைய பொறுப்பற்ற பேச்சினால் பாமர முஸ்லிம்கள் எவ்விதம் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற கவலையே கிடையாது. பாகிஸ்தான் அனுதாபத்தினால், அடைந்த அளவில்லாத துன்பங்களை சகித்தோம். இனி இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தான் அனுதாபத்தினால் ஹைதராபாத்துக்கு பலியாகப் போவதில்லை. இந்த தேசத்தின் எதிரி நமது எதிரி. கடந்த ஒரு வருஷ சம்பவங்கள் நமக்கு முன்னால் இருக்கின்றன. இனி நாம் வழிதவறி நடக்கமாட்டோம். வகுப்புவாத துவேஷப்பித்து நம்மை படுநாசத்திற்கு ஆளாக்கி விட்டது. இனி அந்தக்குழியில் விழப்போவதில்லை. இந்திய மண்ணில் எஞ்சியுள்ள முஸ்லிம்கள் புஷ்பப்படுக்கையில் உல்லாசமாக படுத்திருக்கலாம் என்று எண்ணக் கூடாது. இந்திய அரசியலில் எவ்வளவோ பயங்கரமான மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. அதையெல்லாம்சகித்து தேசத்திற்காக ஒத்துழைக்கும் மனோபாவமுள்ளவர்கள்தான் இங்கு இருந்து வரலாம். தேசத்திற்கு ஏற்படும் துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்ளாமல் தான்தோன்றித்தனமாய் திரியும் வகுப்புவாத வெறியர்கள் இன்றையதினமே இங்கிருந்து ஓடிப்போகலாம். அவர்கள் என்றும் தேசத்தைக் காட்டிக் கொடுத்து விட்டு ஓடுவார்கள். இன்றே ஓடட்டும். உங்களுக்குத்தெரியும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் உங்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார். ஜின்னாவும், அவரது கோஷ்டியாரும் வேறொரு வழியை காண்பித்திருக்கின்றார்கள் உங்களில் சிலருடைய மூளையில் ஜின்னாவின் பாகிஸ்தான் வழியே சிறந்தது என்று உதயமாகிறது அப்படிப்பட்டவர்கள் அதையேற்று இங்கிருந்து ஓடிவிடுவது அவர்களது கடமையாகும். பாகிஸ்தான் அனுதாபிகள் இங்கிருந்து கொண்டு மற்றவர்களையும் சந்தேகத்துக்குள்ளாக்குவது அவர்களது மடத்தனமாகும் என்று பேசிமுடித்தார்.

## 1300 முஸ்லிம்கள் பாகிஸ்தான் பயணம்.

பம்பாய் செப். 11

சென்ற வெள்ளிக்கிழமை 1300 முஸ்லிம் அகதிகளைக் கொண்ட கம்பாலா என்ற கப்பல் பம்பாயிலிருந்து பாகிஸ்தானுக்கு புறப்பட்டது. இதே கப்பல் திரும்பும்பொழுது பாகிஸ்தானிலிருந்து 2500 அகதிகளை இந்திய யூனியனுக்கு ஏற்றிக்கொண்டு வரும்.

## போலீஸ் வாபஸ்.

கடத்தப்பட்ட பெண்களை மீட்டு பரிவர்த்தனை செய்துகொள்வதற்காக இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இருந்த போலீஸார்களை இந்திய, பாகிஸ்தான் கவர்மெண்டுகள் திருப்பி அழைத்துக்கொண்டு விட்டார்கள் என்று தெரிகிறது.

# மிஸ்டர் முகம்மது அலி ஜின்னா

• • •

பாகிஸ்தான் முதலாவது கவர்னர் ஜெனரல் ஹிஸ் எக்ஸலன்ஸி முகம்மது அலி ஜின்னாவின் மரணத்தால் நீண்ட காலம் வரை சரித்திரம் நினைத்துக் கொண்டிருக்கப் போகும் ஒரு மனிதர் உலகத்திலிருந்து மறைந்தார். கராச்சியில் பிறந்த மிஸ்டர் ஜின்னா கராச்சியிலேயே மண்ணுக்கு இரையானார். 1876-ல் பிறந்து 1948 வரையுள்ள 72 வருஷ வாழ்க்கையில் அநேக அரசியல் கலாசார ஏற்றத் தாழ்வுகளைப் பார்த்தார். வாழ்நாட்களின் கடைசிப் பகுதியில் அவருடைய முயற்சியின் பலனாக இந்தியப் பிரிவினைக்குப் பிறகு அமைந்த 'பாகிஸ்தான்' தனக்கு ஞாபகார்த்தமாக விட்டுச்சென்றார். மிஸ்டர் ஜின்னா ஷீயா வகுப்பில் உதித்தவர். ஆரம்பக்கல்வியும் அதன் பிறகு பதினாறாவது வயதில் இங்கிலாந்து சென்று பெற்ற பாரிஸ்டர் டிகிரியும் சுயேச்சையான மேல் நாட்டு நாகரீகப் பிரியராக அவரை ஆக்கிவிட்டது. ஒரு பார்ஸி பெண்ணை மணந்திருந்தார். தாதாபாய் நௌரோஜியின் அந்தரங்க காரியதரிசியாக இருந்த போது அரசியல் 'அ, ஆ' வைப்படித்தார். லார்ட் மிண்டோவிடம் சில முஸ்லிம்கள் தனித்தொகுதி கோரியதை மிஸ்டர் ஜின்னா கடுமையாக எதிர்த்தார். அதற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அவரே கையெழுத்திட்டிருக்கிறார். 1906-ல் அவர் கல்கத்தா காங்கிரஸில் முதல் தடவையாகக் கலந்துகொண்டார். 1918 வரை காங்கிரஸிலிருந்தார். 1920-ல் கிலாபத் போராட்டமும், ஒத்துழையாமை இயககமும் ஏற்பட்டவுடன் காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட்டார். கிலாபத் தலைவர்களும், காங்கிரஸ்காரர்களும் சிறைக்குள் போய்க்கொண்டிருக்கையில் மிஸ்டர் ஜின்னா காங்கிரஸைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தார். முதலிலிருந்தே லீக் மெம்பராகவும் 1918-ல் லீக் தலைவராகவுமிருந்த மிஸ்டர் ஜின்னா போராட்டம் முடிந்த பிறகு லீக் மேடையிலிருந்து முஸ்லிம்களை ஒன்று திரட்டும் வேலையை ஆரம்பித்தார். ஆனால் கிலாபத் போராட்ட காலத்தில் மௌலானா முஹம்மது அலி அடைந்திருந்த செல்வாக்கின் காரணமாக போராட்டம் முடிந்து பல வருஷங்கள் வரை முஸ்லிம் பொதுமக்களிடம் செல்வாக்கு பெற மிஸ்டர் ஜின்னாவுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. முஸ்லிம் லீக் நாற்காலியை அலங்கரிக்கும் அரசியல் வாதிகளின் பிரதிநிதித்வம் வாய்ந்த ஒரு ஸ்தாபனமாகவே இருந்தது. மிஸ்டர் ஜின்னாவின்

## லீக் தலைவர் இஸ்மாயில் சாகிபுவின் தடுமாற்றம்.

அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் மிஸ்டர் இஸ்மாயில் சாகிப் விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம்கள் தங்கள் சர்க்காரிடத்தில் விஸ்வாசமுள்ள பிரஜைகளாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார். இந்தியாவை துண்டு போட்டு எதிர்பிரசாரம் செய்தது மட்டுமில்லாமல், இந்தியாவின் பூமியை ஆக்கிரமித்துக் கொண்டு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பாஸிஸ்டுகளின் ஸ்தாபனமாகிய லீகை இங்கு இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார். சென்ற மாதம் திருநெல்வேலியில் நடந்த இடைத்தேர்தலின்போது லீகுக்கு போடப்படும் ஓட்டு குர் ஆனுக்கும், இஸ்லாமுக்கும், சுவர்க்கத்துக்கும் போடப்படும் ஓட்டாகுமென்று பேசிய இஸ்மாயில் சாகிப் விசுவாச பிரஜைகளாக இருக்கவேண்டுமென்றும் முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்கிறார். இந்த மாதிரியான பேர்வழிகளை தலைவர்களாக வைத்துக் கொண்டு நமக்கு நாமே அழிவை தேடிக் கொள்கிறோம் என்பதில் என்ன சந்தேகம்? விழித்துக் கொண்ட முஸ்லிம்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து லீக் ஸ்தாபனங்களை கலைத்த வண்ணமாக இருப்பதை நாம் தினம் பத்திரிகையில் பார்க்கிறோம். அப்படியிருந்தும் இந்த தலைவர்கள் லீக் நாமத்தை உச்சரித்துக் கொண்டே முஸ்லிம்களின் அழிவைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு விரோதமான மனோபாவம் கொண்டவர்களுக்கு ஒருகாலத்தில் காபிர்கள், காங்கிரஸ் கூத்திகள், ஷோபாய்கள் என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். தண்ணீரில் ஒரு மனிதனை தூக்கிப்போட்டுவிட்டு துணி நனையாமலிருக்கட்டும் என்று சொல்லுவது போல் இருக்கிறது இஸ்மாயில் சாகிப்புவின் விசுவாசம். இந்த வீண் பிடிவாதங்களை விட்டு, அவருக்குப் பிடித்திருக்கும் தலைமைப்பித்தையும் அகற்றி, முஸ்லிம்களை கௌரவமாக வாழும்படி செய்ய அவருடைய பதவியிலிருந்து விலகி, லீகையும் குழிதோண்டி புதைத்துவிட்டால் அவரும், அவர்சகாக்களும் விசுவாச முள்ள பிரஜைகளாக மதிக்கப்படுவார்கள். அப்பொழுதுதான் முஸ்லிம்களை விசுவாசமுள்ள பிரஜைகளாக இருக்கச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. ஆனால் இன்று இந்தியாவின் அழிவை விரும்பும் ஒரு ஸ்தாபனத்தின் தலைவராகிய அவரே தான் ஒரு விசுவாசமுள்ள பிரஜைதானா என்பதை தனது மனதைக் கேட்டு தெரிந்து கொள்ளட்டும்.

தலைமையில் பிரதி வருஷமும் வெறும் தீர்மானங்களை நிறைவேற்றி வந்தது அதனால் முஸ்லிம் பொதுமக்களின் அரசியலில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்ஸாரி, மௌலானா முகம்மதலி முதலியோர் முஸ்லிம்களை காங்கிரஸுடன் இணைத்து நடத்தி வந்தவரையில் மிஸ்டர் ஜின்னாவின் முஸ்லிம் லீக் முஸ்லிம்களுக்காக தனி அரசியல் மேடை அமைப்பதில் வெற்றி பெறவில்லை. நாளாவட்டத்தில் அவர்கள் ஒவ்வொருவராக மறைந்த பிறகு கேட்பாரற்று கிடந்த முஸ்லிம்களை ஆக்ரமிக்க மிஸ்டர் ஜின்னாவுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. வட்டமேஜை மஹாநாட்டுக்கு முன் மிஸ்டர் ஜின்னா சோர்வடைந்து இந்தியாவைவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். தன்னுடைய வாழ்க்கையின் பாக்கியுள்ள நாட்களை அங்கேயே கழிக்கவும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியப் பிரச்னைக்கு பிரதிநிதித்வம் வகிக்கவும் விருப்புவதாகக்கூட அறிவித்தார். இங்கிலாந்தில் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. வட்டமேஜை மஹாநாடுகளில் கலந்துகொண்ட பிறகு இந்தியாவுக்கே திரும்பி வந்தார். அவர் திரும்பி வந்த காலத்தில் மௌலானா முஹம்மத் அலி உயிருடன் இருக்கவில்லை. வட்டமேஜை மஹாநாடுகளுக்காக ஆகாகான் தலைமையில் கூடிய முஸ்லிம் கான்பிரன்ஸ் தோற்றுப் போயிருந்தது. காங்கிரஸில் போதுமான அளவுக்கு முஸ்லிம்களின் செல்வாக்கிருக்கவில்லை. நேரு யாதாஸ்தினால் ஏற்பட்ட அபிப்பிராய பேதமும் வட்டமேஜை மஹாநாட்டின் விளைவுகளும் அவநம்பிக்கையளிப்பதாயிருந்தன. முஸ்லிம்களின் பல்வேறு கட்சிகளின் யூனிடி மஹாநாடுகள் நடந்துகொண்டிருந்தன. அரசியல் வகுப்புவாதத் துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது வட்டமேஜை மஹாநாடுகளின் முடிவுகள். அதற்கு ஊக்கமளிக்கக் கூடியவைகளாக இருந்தன. புதிய அரசியல் திட்டப்படி தேர்தல்கள் நடக்கவிருந்தன. மிஸ்டர் ஜின்னா முஸ்லிம்களின் அரசியலை பூரணமாக ஆக்ரமித்துக் கொள்ள அதுவே ஏற்ற சந்தர்ப்பமாகவும் இருந்தது. மிஸ்டர் ஜின்னாவின் வாக்குறுதிகளை நம்பி 1936-ல் ஜமீயத்துல் உலமா முஸ்லிம் லீகுடன் சேர்ந்து பார்லிமெண்டரி போர்டை அமைத்தது. ஜமீயத் தலைவர்களுடன் சென்று மிஸ்டர் ஜின்னா முஸ்லிம் பொதுமக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். தேர்தல்களில் பார்லிமெண்டரி போர்டுக்கு கிடைத்த வெற்றி முஸ்லிம் லீக்கின் வெற்றியாகப் போய்விட்டது. தேர்தல்களுக்கு முன் அளித்த வாக்குறுதிகள் அலட்சியம் செய்யப்பட்டன. நாளாவட்டத்தில் ஜமீயத் தலைவர்கள் வெளியேறினர். இவ்விதம் ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்ஸாரி, மௌலானா முஹம்மதலி முதலியோரால் தடுக்கப்பட்டிருந்த மிஸ்டர் ஜின்னாவைப் போன்ற ஒருவர் சரித்திரத்திலேயே முதல் தடவையாக முஸ்லிம்களின் தலைவராக விளங்க ஆரம்பித்தார்.

மாகாணங்களில் காங்கிரஸிலிருந்து ஹிந்துக்களையும் லீக்கிலிருந்து முஸ்லிம்களையும் மந்திரிகளாக நியமிக்கும்படி மிஸ்டர் ஜின்னா காங்கிரஸைக் கோரினார். தம் கோரிக்கை நிறைவேறாததால் மிஸ்டர் ஜின்னாவுக்கு காங்கிரஸ் மீது எல்லையற்ற கோபம்ஏற்பட்டது அதற்குப் பிறகு அரசியல் பலாத்காரத்துடன் கூடிய வகுப்புவாதத்தை நோக்கி வேகமாக செல்ல ஆரம்பித்தது. காங்கிரஸைத் தூற்றி மிஸ்டர் ஜின்னாவின் அறிக்கைகள் வெளிவந்தன. காங்கிரஸ் மந்திரி சபைகளை எதிர்க்க முஸ்லிம் லீக் பலப்படுத்தப் பட்டது என்றுமே இல்லாத அளவுக்கு வகுப்புவாத சண்டமாருதங்கள் அடித்தன. காங்கிரஸ் முஸ்லிம்கள் எதிர்த்து நிற்க முடியாமல் தடுமாறினர். முஸ்லிம்கள் அலசிப் பார்க்கும் அறிவையும் இழக்கும் அளவுக்கு மிஸ்டர் ஜின்னா முஸ்லிம்களின் வகுப்புவாத உணர்ச்சிகளை தனக்கு சாதகமாக பிரயோஜனப் படுத்திக்கொண்டார். முஸ்லிம் லீகை எதிர்த்த முஸ்லிம்களை சமூக துரோகிகளென்று அழைத்தார் யுத்த ஆரம்பத்தில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினாமா செய்து வெளியேறின. 'விமோசன தினம்' கொண்டாடச்சொல்லி மிஸ்டர் ஜின்னா முஸ்லிம்களின் வகுப்பு வாதத்தை மேலும் தூண்டினார். காங்கிரஸ்காரர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தபோது விஷம பிரசாரம் செய்து ஹிந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்களை தூண்டிவிட முஸ்லிம் லீகுக்கு போதுமான அவகாசம் கிடைத்துவிட்டது. யுத்த காலத்தில் மிஸ்டர் ஜின்னா பிரிட்டிஷாருக்கு எவ்வித தொந்திரவும் கொடுக்கவில்லை யுத்தம் முடிந்து இந்திய சுதந்திர பிரச்னை எழும் சந்தர்ப்பத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வந்தார். இதற்கிடையில் முஸ்லிம் லீக் பிற்போக்கு வாதிகளின் உதவியால் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஒரு உருவம் கொடுக்கப்பட்டது ஒரு காலத்தில்

ஸிலோன் முழுவதற்கும்
'ஆஸாத்' ஏஜெண்ட்

மெஸ்ஸர்ஸ்

**எம்மல் & கோ.,**

ஜெனரல் மர்ச்செண்ட்ஸ் & கமிஷன் ஏஜெண்ட்ஸ்

**காம்போலா,**

ஸிலோன்.

சாத்தியமற்றதென்றும், சிறுபிள்ளைத்தனமானதென்றும் மிஸ்டர் ஜின்னாவே சொல்லியிருந்த பாகிஸ்தான் திட்டம் இருசமுதாய கொள்கையை உரமாகக் கொண்டு வளர ஆரம்பித்தது லீக் மேடையிலிருந்து பாகிஸ்தானுக்காக ரத்தக்களரி நடக்குமென்று பகிரங்கமாக மிரட்டல்கள் வந்தன யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும் இந்திய சுதந்திரத்தைக் குறித்து பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சு வார்த்தைகள் அனைத்திலும் மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தான் கோரிக்கைக்காக தன் முழுபலத்தைப் செலவிட்டார் வகுப்புக்கலவரங்களின் அபாயத்தால் நாடுநடுங்கிற்று வெற்றி மிஸ்டர் ஜின்னாவை சமீபித்தது கலவரங்களை தடுப்பதற்காக காங்கிரஸ் தலைவர்கள் பிரிவினையை நிபந்தனையாகக் கொண்ட இந்திய சுதந்திர திட்டத்தை ஒப்புக்கொண்டனர். பாகிஸ்தான் அமைந்தது மிஸ்டர் ஜின்னா வெற்றியடைந்தார் பாகிஸ்தான் ஏற்பட்டதால் கலவரங்கள் ஓயவில்லை. சுதந்திர சூரியன் ஒருபுறம் நாட்டில் உதித்தான். இன்னொருபுறம் மக்கள் ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தனர். மனிதவர்க்கம் கண்டிராத காட்டுமிராண்டித்தனமும் ரத்தக்களரியுமே பாகிஸ்தான் அமைந்ததின் முதல் விளைவாக இருந்தன. பாகிஸ்தானை அமைத்தவர்களும் ஆதரித்தவர்களும் தாங்கள் செல்லும் பயங்கர வழியை உணராமலே இருந்தனர்போலும். சுயேச்சை வாதி, மத அடிப்படையற்ற தேசிய வாதி, காங்கிரஸ் அரசியல் வாதி, என்ற முறையில் ஆரம்பித்த மிஸ்டர் ஜின்னாவின் வாழ்க்கை முடிவில் வகுப்புவாத சண்டமாருதத்தின் நடுவே வளர்ந்து பாகின்தானுக்காக முயன்று அடைந்த பிறகு முடிவடைந்துவிட்டது பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு மிஸ்டர் ஜின்னா கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் நேசித்த 'காய்தே ஆஜம்' என்றபட்டம் அதிகார பூர்வமாக அவருக்கு கிடைத்தது. வாழ்க்கையில் அவர் பார்க்கவிரும்பிய அனைத்தையும் பார்த்துவிட்டார். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி. இயற்கையாக மதவாதமும் வகுப்புவாதமும் அவருக்கு கிடையாது. அவர் அதை விரும்பாமலிருந்திருக்கவும் கூடும். ஆனால் பிரிட்டிஷார் இந்தியாவில்வளர்த்திருந்த வகுப்புவாதத்தையும் அதனால் ஹிந்து முஸ்லிம்களிடையே ஏற்பட்டிருந்த வேற்றுமையையும் அவர் நன்றாக தெரிந்து கொண்டிருந்தார். அதை வெற்றிகரமான முறையில் அவர் பிரயோஜனப்படுத்திக் கொண்டதைப்போல் வேறுயாராலும் செய்திருக்க முடியாது உண்மையாகவே மிஸ்டர் ஜின்னாவின் மரணம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும அவருடைய ஸ்தானத்தை ஓரளவுக்காவது பூர்த்தி செய்யக்கூடியவர்கள் பாகிஸ்தானில் இன்று இல்லை பல்வேறு கோஷ்டிகளை ஒன்று சேர்த்து வைப்பதில் அவருக்கு அபார திறமையிருந்தது பாகிஸ்தானிலுள்ள மற்றவர்களிடம் அது இல்லை தகுதியுள்ளவர்களுக்கு பஞ்சமுள்ள பாகிஸ்தானில் அவருடைய ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்கு ஆள் கிடைக்க முடியாது. இச்சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானுக்கு அனுதாபம் தெரிவிக்கிறோம். மிஸ்டர் ஜின்னா இன்று நம்மிடையே இல்லை அவர் உயிருடன் இருந்தபோதிருந்த எதிர்ப்புகளும் அவருடன் கூடவே முடிவடைந்து விட்டன. இனியாவது இந்திய பாகிஸ்தான் டொமினியன்கள் முன்னேற்றமடைந்து கடந்தகால மனக்கசப்புகள் வருங்கால சிநேக உறவால் நீங்க வேண்டுமென்று இறைவனை பிரார்த்திக்கிறோம்


## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.



**நமது ஏஜண்டுகள்:—**

பி. மீரா மொய்தீன்,
ரெங்கோன் ஹால்,
காரைக்குடி

● ● ●

M. S. M. கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.



## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

# வளரும் ஜனநாயகம் - 8.

—: தராசு :—

**நம்** நாட்டில் நேரடியான ஜனநாயக முறையை கையாள முடியாதென்பது நிச்சயமாய் நமக்குத் தெரியும். ஜனத்தொகை யதிகமான எந்த தேசத்திலும் இம்முறையில் ஜனநாயக அரசு நடைபெற முடியாது. மறைமுகமான ஜனநாயகம்தான் நம்நாட்டில் அமையுமென்று திட்டமாகச் சொல்லலாம். கட்சியரசு ஜனநாயகத்துக்கு நன்மையைத் தர முடியாது என்றும் தெரிந்து கொண்டிருக்கிறோம். நமது நாட்டில் ஜனநாயகம் கட்சிப்பற்றில்லாமல் பிரதிநிதித்வ முறையைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்த வேண்டியிருக்கிறது. எல்லாக் கட்சிகளையும் கொண்ட கூட்டு சர்க்கார் நிச்சயமிருக்கக்கூடாது. கூட்டு சர்க்காரினால் யாதொரு நன்மையும் ஏற்படமுடியாதென்று இந்திய இடைக்கால சர்க்கார் நிரூபித்துவிட்டது. கட்சிப் பற்றில்லாத அரசுதான் தேசீய அரசாக இருக்க முடியும். தேசீய அரசு பலமற்றதாக இருக்கும் என்று சிலர் வாதிக்கக்கூடும் ஜனநாயகத்தின் ஜீவாதாரம் சரியாக இருக்குமேயானால் இத்தகைய பலஹீனம் ஏற்படவேமுடியாது பிரஜா உரிமையின் தத்துவத்தையும், வாக்காளர்களுக்குண்டானபொறுப்பையும் நன்றாக உணரமுடியுமானால் கட்சியினாலேற்படும் நன்மையைவிட அதிகமான நன்மையை தேசீய அரசினால் பெறமுடியுமென்பது உறுதியான விஷயம்.

பிரஜாஉரிமையின் தத்துவம்தான் வளரும் ஜனநாயகத்துக்கு முக்யமான அம்சமாகும். பிரஜா உரிமையின் தத்துவத்தைப்பற்றி சமீபத்தில் சென்னையில் இந்தியப் பிரதம மந்திரி **ஸ்ரீ** ஜவஹர்லால் நேரு அவர்கள் பேசியிருப்பதை ஒவ்வொருவரும் நன்குகவனிக்கவேண்டும் அரசியலில் அடிமைத்தனம் நீங்கும்போதுதான், பிரஜாவுரிமை தலைதூக்கி நிற்க முடியும். பிரஜா உரிமையை ஆதாரமாகக் கொண்டுதான் பிரதிநிதித்வ ஆட்சி முறையை, அதாவது மறைமுகமான ஜனநாயகத்தை நிலைநிறுத்தவேண்டும். மறைமுகமான ஜனநாயகம் சரியாக அமையவேண்டுமானால், பிரஜைகளின் சுதந்திரத்தையும், சமத்வத்தையும் உறுதி செய்யவேண்டும். தேசத்தின் நன்மைக்கும், பிரஜாவுரிமைக்கும் பாதகமில்லாமல் சுதந்திரத்தை அனுபவிக்க தனி மனிதனுக்குள்ள உரிமை வரம்பு கடந்ததாகும். தேசத்தின் சட்டங்களும், நீதி மன்றங்களும், இச்சுதந்திரத்தை வெகு ஜாக்கிரதையாக பாதுகாக்க வேண்டும். ஜனநாயக சிந்தனைகளை உணர்ச்சிப் பூர்வமாக கிளப்பியது பிரஜாவுரிமைதான். தேசத்தின் பாதுகாப்பு அல்லது மக்களின் நன்மை இவற்றிற்கு அவசியமான அளவுக்கு தனி நபர்களின் செய்கைகளை தடுக்கலாம் ஆனால் இவ்விதமான செய்கைகளை தடுக்கும்படியான நடவடிக்கைகளை எடுக்கும்போது, சட்ட நிரூபணங்களிலும், நிர்வாக நடத்தைகளிலும் சுதந்திர உணர்ச்சியை வெகு சிரத்தையுடன் நிலைநிறுத்த வேண்டும். இந்த விஷயத்தை உதாரணத்துடன் விளக்கினால்தான் சாதாரணமாகப் புரிந்துகொள்ள முடியும். சமீபத்தில் கம்யூனிஸ்டுகளின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதை எல்லோரும் அறிவோம். தனி நபரின் உரிமையை அரசாங்கம் பறிமுதல் செய்து விட்டதாக யாரும் இந்த சந்தர்ப்பத்தில் கூற முடியாது. தனி நபருக்குண்டான முறையை சரியாக உபயோகிக்கும்போது அரசாங்கம் அதில் தலையிட்டால், அதை அநியாயம் என்று கூறலாம். ஆனால் தனி நபர்களில் சிலர் ஒன்று கூடி, அரசாங்கத்தின் நிர்வாகத்தை தடைப்படுத்தவோ, அல்லது மற்றவர்களின் உரிமையை பறிப்பதாகவோ தோன்றினால், அத்தகைய செய்கைகளை எந்த அரசாங்கமும் சகித்துக் கொள்ளமுடியாது. பிரஜைகளும் அத்தகைய இயக்கங்களை அறவே ஒடுக்க அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் நியாய முறைப்படி அவர்களுக்குண்டான உரிமையை எப்பொழுதும் அனுபவிக்கும் வசதியை அரசாங்கம் பறிமுதல் செய்யவில்லை; இதைத்தான் சுதந்திர உணர்ச்சியுடன் கூடினது என்று கூறினோம். இத்தகைய சுதந்திர உணர்ச்சியை நிலை நிறுத்துவது மிகவும் அவசியம். ஒரு யதேச்சாதிகார அரசில், தனி மனிதன் உரிமையைக் காப்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு வளரும் ஜனநாயக ஆட்சியின்கீழ் நடைபெறும் கட்சியரசில் கூட நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் ஜனநாயக லட்சியங்கள் மட்டும் மக்களுக்கு போதிய பாதுகாப்பாக முடியாது; ஆகையால் வளரும் ஜனநாயக அரசில் பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளுக்கு தக்க உறுதியானது, அரசியல் சட்டத்தில் இடம்பெறுவது தான் சரியான பாதுகாப்பாக முடியும்.

நீதி பரிபாலனமும், நியாயம் வழங்குவதும் நீதி மன்றங்களின் பொறுப்பாக இருக்க வேண்டும். பிரஜைகளின் உரிமைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கும் சக்தியுடன் கூடிய நீதிமன்றங்களிருக்க வேண்டும். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள் வளரும் ஜனநாயகத்தில் அரசியல் சுதந்திரம் எவ்வளவு

முக்கியமோ, அதேபோல் நீதி மன்றங்களின் சுதந்திரமும் முக்கியம்தான். நிர்வாகத்தை நடத்தும் அரசாங்கமோ, அல்லது பொதுமக்களின் கூச்சலோ நீதிபதிகளின் வேலைகளில் குறுக்கிடக்கூடாது. நடுநாயகமாய் நியாயம் வழங்க, சில ஏற்பாடுகள் மிக முற்போக்கான அரசியல் திட்டங்களில் கூட காணப்படுகிறது. நீதிபதிகளின் உத்தியோக காலமும் ஊதியமும் பதவியிலிருக்கும்போது அவர்களுக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ மாற்றக்கூடாது நடத்தை சரியாக இருக்கும் வரையில் பதவியிலிருக்கலாம் என்ற உறுதியிலிருக்க வேண்டும். கீழ்தர நியாயாதிபதிகள் மாஜிஸ்டிரேட்டுகள் முதலியவர்களை முதலில் அரசாங்கம் நியமிக்க வேண்டும். பிறகு அவர்களுடைய உத்தியோக உயர்வு, ஊதியம் முதலியவற்றின் பொறுப்பு உயர்தர நீதிமன்றங்களின் அதிகாரத்துக் குட்பட்டிருக்க வேண்டும். வக்கீல்களின் சுதந்திரம் வளரும் ஜனநாயகத்துக்கு இன்றியமையாததாகும். மக்களின் ஆசைகள் நோக்கங்கள், வேலைகள் முதலியவற்றில் சிறிது காலமாக வக்கீல்கள் ஐக்கியப்பட்டிருப்பதால் இவர்களுடைய சுதந்திரம், சமூகத்திற்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது.

சட்ட நிரூபணம் முதலியவற்றில் தைரியத்துடனும், சாமர்த்தியமாகவும் புதிய மாறுதல்களைச் செய்ய, பொதுமக்களின் அபிப்பிராயத்தை திடப்படுத்தி உருவாக்கவேண்டியது வக்கீல்களின் கடமையாகும். நீதி பரிபாலனமும் பிரஜாவுரிமையையும் ஆதாரமாகக் கொண்டுதான் பிரதிநிதித்வம் ஏற்பட வேண்டும் இதுவரையில் வந்த கட்டுரைகள் முழுமையும் இதே கருத்தை வற்புறுத்தியிருக்கின்றன. "அரசாங்கம் ஸ்திரமாக இருப்பதற்கவசியமான அளவு கட்டுப்பாடும் முன்னேற்றத்துக்கவசியமான சிந்தனையும், அதை செயலாற்றுவதற்குண்டான வசதியுமிருப்பதுதான், ஜனநாயகத்தின் லட்சியமாகும்." என்பதை திடப்படுத்திக் கொள்ள வேண்டியது சமூகத்தின் கடமையாகும். வளரும் ஜனநாயகத்தின் லட்சியங்கள், புது ஊக்கத்தையும் தைரியத்தையும், நம்மிடம் விருத்தி செய்யும் என்று திடமாகக் கூறமுடியும்; ஆனால் பழய சந்தேகங்களையும், கற்பனைகளையும் கைவிட்டுவிடவேண்டும். காலமும் விதியும் நம்முடைய ஜனநாயக முன்னேற்றத்தில், தடைகளை விருத்தி செய்தாலும், நம்முடைய முயற்சியில் மட்டும் பின்வாங்காத உணர்வு நிலைத்திருக்குமேயானால் ஜனநாயகமும் வளரும், நாடும் சுகமடைய முடியும்.

ஜெய்ஹிந்த்!

## டால்மியா சிமெண்ட் தொழிலாளர் சங்கம்.

டால்மியாபுரம், 14—9—48

டால்மியா சிமெண்ட் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் கம்யூனிஸ்ட்கட்சியின் பெயரால் குழப்பங்களைச்செய்துவருகின்றனர், அவர்களுக்கும் அதற்குஉடந்தையாக நடந்துக்கொள்கின்றவர்களுக்கும் டால்மியா நிர்வாகத்தார் தனிச்சலுகை காட்டி வருவதால் குழப்பங்களேற்படக்கூடுமென்றும் முன்னேற்பாடாக தலையிட்டு தடுக்க வேண்டுமென்றும் டால்மியா தொழிற் சங்கம் சர்க்காரை வேண்டிக் கொண்டதை யொட்டி விசாரிக்க வந்த லால்குடி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் டால்மியா நிர்வாகத்தாரை முதலில் கலந்துகொண்டு டால்மியாவின் "Gu st Hou e"ல் தங்கினர். 1947-ல் லேபர் யூனியன் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட குவாரித் தொழிலாளி தற்போது வேலை கேட்டுக்கொண்டு அலைவதையும், கம்யூனிஸ்ட் கட்சியென்று சொல்லிக் கொண்டு காங்கிரஸ் சங்கத்திலிருந்து பிரிக்கப்பட்ட குவாரித் தொழிலாளர்கள் மதுக்கரையில் பட்ட கஷ்டத்தையும் எடுத்துக்காட்டி நல்ல முறையில் நடக்கும் காங்கிரஸ் தொழிற் சங்கத்தில் சேரும்படி பிரசாரம் செய்த சாமியப்பன் என்பவரை கைது செய்ததோடு தொழிற் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ப. நடராஜனை போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அறைந்து இழுத்துவந்து தொழிற் சங்கத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் காரில் ஏற்றி ஸ்ரீ ப. நடராஜன் தொடைமேல் சப் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து கொண்டார்.

காரியதரிசி பதவியிலிருந்து விலகி விடும்படியும், நல்ல மனிதனான ஸ்ரீ ராய் மானேஜரை குறை கூறும் இந்த நாயை ஒழித்துவிட வேண்டுமென்றும், ஸ்ரீ ராயின் காலைப் பிடித்து பிழைப்பதை விட்டுவிட்டு பிச்சைக்கார நாய்கள் சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறதென்றும் பழனியாண்டி (சங்கத் தலைவர்) கிடைக்காதது பெரிய வருத்தமாகி விட்டதாகவும் கூடிய சீக்கிரம் இதே தண்டனையை அந்த நாய்க்கும் கொடுக்கவேண்டுமென்றும் பேசி சர்க்கிளும், சப் இன்ஸ்பெக்டரும் மாறி மாறி கையால் ஸ்ரீ ப. நடராஜனை வாயிலும் தாடையிலும் இடித்தனர். பொரடியிலும் முதுகிலும் குத்தினர். சிண்டை பிடித்துக் குலுக்கினர். டால்மியாபுரத்திலிருந்து லால்குடி வரை ஹிம்சித்து வந்தனர். காரில் நடந்ததை வெளியிடுவதாகயிருந்தால் ஜாமீனில் கூட விடமுடியாதென்றும் பயமுறுத்தப்பட்டது காயங்களுக்கு சர்டிபிகேட் வாங்கி 13—9—48 மாலை D S. P. அவர்களிடம் நேரில் காயங்களைக் காட்டி புகாரும் தாக்கல் செய்யப்பட்டது.

14—9—48-ந் தேதி காலை லால்குடி சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் லால்குடி போலீஸ சர்க்கிள், சப் இன்ஸ்பெக்டர்கள் மீது டால்மியா சிமெண்ட் தொழிற் சங்க காரியதரிசியால் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ப. நடராஜன், காரியதரிசி.

# சிறந்த வழி.

முஸ்லிம் சமஸ்தானமான மாலீர்கோட்லா இந்திய யூனியனில் இணைந்த பிறகு சமஸ்தான சிப்பந்திகளிடம் சம்பிரதாயப்படி இந்திய விஸ்வாஸம் கோரப்பட்ட போது விஸ்வாஸப் பிரமாண மெடுக்க மறுத்து பாகிஸ்தானுக்குப் போக விரும்பிய போலீஸ் ராணுவத்தைச் சேர்ந்த கிட்டதட்ட நானூறு முஸ்லிம்கள் லாஹூருக்கு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது உத்தியோகத்துக்காக தங்கள் மன சாட்சியை விற்க அவர்கள் சம்மதிக்கவில்லை. விரும்பியிருந்தால் கலீகுஜ்ஜமானைப்போல் விஸ்வாஸ வேஷம் போட்டுக்கொண்டு உத்தியோகங்களில் நீடித்திருந்து சமயம் வரும்போது அவர்கள் பாகிஸ்தானுக்கு ஓடியிருக்கவும் முடியும். இந்திய விஸ்வாஸிகளாக இருக்க தங்களால் முடியாதென்று பஹிரங்கமாய் அறிவித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறும் அவர்களுடைய நேர்மையை மெச்சாமலிருப்பதற்கில்லை.

துரதிர்ஷ்ட வசத்தால் பைத்தியக்காரத்தனமான முடிவு செய்திருப்பினும் அவர்களை பாராட்டுகிறோம். தங்களுடைய செய்கையால் இந்திய முஸல்மான்களுக்கு அவர்கள் சரியான வழி காட்டியிருக்கின்றனர். பாகிஸ்தானில் அவர்களுடைய கதி எது வேண்டுமானாலும் இருக்கட்டும். இந்தியாவை விட்டு அவர்கள் கண்ணியமாக வெளியேறியிருக்கின்றனரென்பது திண்ணம்.

வாயினால் 'ஜெய்ஹிந்த்' என்று கோஷித்து உள்ளத்தில் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று ஜபிக்கும் லீகர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். அவர்கள் கண்ணியமாக வெளியேறிவிடலாம். அதனால் அவர்களுக்கும் நன்மையுண்டு. தங்கள் நாட்டுக்காக சாத்தியமான எல்லாவற்றையும் அர்ப்பணிக்கத் தயாராயிருக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மையுண்டு

தேசம் அழைக்கும் போது துப்பாக்கியைத் தாங்கி பாகிஸ்தானை தகர்த்தெறிய முன்னணியில் பாய்ந்து செல்லத் தயாராயிருப்பவர்களைத் தவிர பாகிஸ்தான் மோகம் பிடிதத முஸ்லிம்கள் இந்த நாட்டில் வாழ முடியாதென்பது நிச்சயம். எனவே லீகர்கள் தங்களுடைய எதிர்காலத்தைக் குறித்து தீர்க்கமாக சிந்தித்து முடிவுக்கு வரவேண்டிய தவசியம்.

## பாகிஸ்தான் கதவு மூடப்பட்டது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் போகும் முஸ்லிம்களுக்கு செப்டம்பர் பத்தாந்தேதிக்குப் பிறது பாகிஸ்தான் அரசாங்கம் தடைவிதிக்கிறது. இனி இங்குள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் அனுமதியின்றி எந்த ஒரு முஸ்லிமும் பாகிஸ்தான் எல்லையில் காலடி வைக்க முடியாது

என்னே! முஸ்லிம்களின் பரிதாப நிலை! ஏற்கனவே பாகிஸ்தானுக்குச் சென்று நடைப் பிணங்களாக இருந்துவரும் முஸ்லிம்கள் பாகிஸ்தானில் இருப்பதைவிட இந்தியாவில் இறப்பது மேலென்று கதறுகின்றனர். ஆனால் இந்தியக் கதவு மூடப்பட்டுவிட்டது அங்குள்ள இந்திய ஹைகமிஷனர் அனுமதியில்லாமல் இந்தியா வர முடியாது அப்படியே அனுமதியுடன் வந்தாலும் நான்கு வாரங்களுக்கு மேல் தங்க முடியாது. திரும்ப பாகிஸ்தானுக்கு ஓடியாகவேண்டும்.

இந்தியாவிலிருக்க முடியாமல் பாகிஸ்தானுக்கு வாவிரும்பும் முஸ்லிம்கள் மீது இன்று இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் கதவுகள் முடியாகிவிட்டது. இந்தியாவில் காங்கிரஸ் அதிகாரத்திலில்லாமல் ஒரு சாவர்க்காரோ அல்லது. ஒரு தாராசிங்கோ அதிகாரத்திலிருந்திருந்தால் தற்கொலை புரிந்துகொள்வதைத் தவிர முஸ்லிம்களுக்கு வேறு வழியில்லாமல் போயிருக்குமென்பது நிச்சயம்.

இந்நிலையில் இந்திய முஸ்லிம்களுக்கு ஒரே வழிதானுண்டு. நம்முடைய கடந்த காலபோக்கை அடியோடு மாற்றிக்கொண்டு தனி உணர்ச்சியைக் கைவிட வேண்டும். இந்தியாவை தாயகமாகக் கொண்டு இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைய வேண்டும். எகிப்திலுள்ள யூதர்கள் தங்களை எகிப்தியர்களென்று சொல்லிக் கொள்வதைப் போல் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும் இந்தியர்களே யாவர். இஸ்லாம் போதிப்பதும் அதுதான்

ஒரு நாட்டில் இடையூறின்றி தங்கள் மதக் கடமைகளை நிறைவேற்ற வசதி பெற்றிருக்கும் முஸ்லிம்கள் அங்குள்ள முஸ்லிமல்லாதாரின் உயிர், பொருள், கவுரவத்தை தங்களுடைய உயிர், பொருள் கவுரவமாக பாவிக்க வேண்டுமென்றே இஸ்லாம் போதிக்கின்றது. மதம் சம்பந்தப்பட்டவரை இங்கு நாம் பூரண சுதந்திரம் பெற்றிருக்கிறோம். எனவே இங்குள்ள முஸ்லிமல்லாதாரின் உயிர், பொருள், கவுரவத்தைக் காக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இஸ்லாமிய போதனையை மதித்து முஸ்லிம்கள் நடக்கமுற்படுவார்களாயின் இந்திய முஸ்லிம் ஒருவன் வடிக்கும் ஒரு துளி கண்ணீரைத் துடைக்க இங்குள்ள

முஸ்லிமல்லாதார் தங்கள் ரத்தத்தை சிந்தவும் தயங்க மாட்டார்களென்பது திண்ணம்.

இந்தியாவை தாயகமாகக் கொண்டு இஸ்லாமிய போதனையை மதித்து நடக்க முடியாத முஸ்லிம்கள் சீக்கிரமே வெளியேறிவிடுவது நல்லது. இன்று நமக்கு சோதனையான காலம். தாய்நாட்டுப் பற்றுடன் நேர்மையாக நடந்து கொள்ளத் தவறினால் நம்மை உலகத்தின் எந்த சக்தியும் காப்பாற்ற முடியாது.

இனி இந்தியா வகுப்புவாதத்துக்கு இடமளிக்கப் போவதில்லை. வகுப்புவாதிகள் யாராக விருப்பினும் அவர்களுக்கு எதிர்காலமில்லை. இஸ்லாமிய ஆட்சியென்று நம்பியிருக்கும் பாகிஸ்தான் அனுதாபிகளுக்கு இங்கு வேலையில்லை பாகிஸ்தானை விரோதி நாடென்று இந்தியா நினைக்கும் பட்சத்தில் நமக்கும் விரோதி நாடாகத்தான் இருத்தல் வேண்டும். பாகிஸ்தானிடம் இந்தியாவுக்குள்ள தொடர்பையும் அனுதாபத்தையும் தவிர நமக்கு தனிப்பட்ட தொடர்போ அனுதாபமோ இருக்கமுடியாது ஆகையால் இனியும் யாருக்காவது பாகிஸ்தான் மோகம் நீங்காமலிருந்தால் நாலரை கோடி முஸ்லிம்களின் அமைதியான வாழ்க்கைக்கு பங்கம் ஏற்படாமலிருக்க அவர் உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேறிவிடுவதுதான் யோக்கியப்பொறுப்புள்ள நடத்தையாகும்.

## அஹ்ரார்களும், அப்துல்கையூமும்,

பிரிவினைக்குப்பிறகு அஹ்ரார்கள் முதன் முதலாக பெஷாவரில் நடத்தவிரும்பிய மஹாநாட்டை எல்லைப்புரசர்க்கார் அனுமதிக்கவில்லை. சமயசந்தர்ப்பத்தை உத்தேசித்து கூட்டங்கள், மஹாநாடுகள் நடத்த அனுமதி மறுக்கப்படுவது எந்த சர்க்காரிலும் சகஜம். ஆயினும் எல்லைப்புர பிரதமர்கான் அப்துல் கையூம்கான் "எப்பொழுதுமே தங்கள் முழு பலத்தையும் கொண்டு பாகிஸ்தானை எதிர்த்து வந்தவர்களுக்கு பாகிஸ்தான் மக்களுக்கு வழிகாட்ட உரிமையில்லை. ஆகையால் எல்லை மாகாண எல்லைகளுக்குக்குள் அஹ்ரார்கள் மஹாநாட்டை அனுமதிக்க முடியாது." என்று மிகவும் விசித்திரமான காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள்


நமது ஏஜெண்டுகள்

G. அப்துல் லத்தீப்,

மணியக்காரத்தெரு, திருச்சி.

பல சிறந்த

அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்

கைபிடியுடன் அழகிய கலர் கேஸ்

மிகவும் உறுதியாக தயாரிக்கப் பட்டவை.

ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,

ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்

மவுண்டு ரோடு, சென்னை

அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.

பாகிஸ்தானை எதிர்த்த அஹ்ரார்களுக்கு மஹாநாடு நடத்த உரிமையில்லை என்கிறார் அப்துல் கையூம். அஹ்ரார்கள் பாகிஸ்தானுக்கு விஸ்வாஸம் தெரிவித்திருக்கின்றனர். அவர்களுடைய தலைவர்களும் பத்திரிகைகளும் பாகிஸ்தானை ஆதரித்து பிரசாரம் செய்கின்றனர் இருந்தும் அவர்களுக்கு உரிமையில்லையென்று சொல்லும் அப்துல்கையூம் தன்னைப் பற்றி எப்பொழுதாகிலும் சிந்தித்தாரா!

கான் அப்துல்கையூம்கான் காங்கிரஸிலிருந்து கொண்டு வாழ்க்கை பூராவும் லீக்கையும் பாகிஸ்தானையும் எதிர்த்துவந்த பேர்வழி. எல்லைப்புர காங்கிரஸிலிருந்து டாக்டர் கான் சாயபு கல்தா கொடுக்கவிருந்த சமயத்தில் பாகிஸ்தான் ஏற்படுவதற்கு சில மாதங்கள் முன்புதான் ஓடிப்போய் லீக்கில் சேர்ந்தார். பாகிஸ்தானை யெதிர்த்த அஹ்ரார்களுக்கு மஹாநாடு நடத்துவதற்குக் கூட உரிமையில்லையென்றால் பாகிஸ்தானிலுள்ள ஒரு மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருக்க தனக்கு யோக்கியதை உண்டாவென்பதை கான் அப்துல்கையூம் சிந்திப்பாரா!

---

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.